**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 409/2024**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. தங்கவேலு** | **Calling** | : | **சிறப்பு சார்பு ஆய்வாளர், திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **55** |
| | | | **Dated** | : | **27.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1 முதல் வரையிலான எதிரிகள் ஆஜர். ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 14), **திரு. குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் திண்டுக்கல் நகல் வடக்கு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.12.2023ம் தேதி மதியம் 13.45 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, சிவபாலன், வயது 35, த/பெ. ராஜூ, கருதனம்பட்டி, சீலப்பாடி, திண்டுக்கல் என்பவர் தன் அப்பா ராஜூ என்பவர் மீது இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து

ஏற்படுத்தியதாக தார்சியூஸ் பிரபு என்பவர் மீது கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண். 835/2023, பிரிவுகள் 279, 337 இ.த.ச. ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் அசலையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேல் விசாரணைக்காக வழக்குக் கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

வழக்கு சம்பவம் நடைபெற்ற தேதி 14.12.2023 மதியம் 12.45 மணிக்கு என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் சுமார் 1 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு தகவல் சுமார் ஒரு மணி நேரம் காலதாமதமாகக் கிடைத்தது என்றால் சரியல்ல, காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சைக்கு சேர்த்துவிட்டு, அதன்பிறகு காவல் நிலையம் வந்து புகார் மனு கொடுத்ததால் காலதாமதம் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் காலம் எண். 3 ல் 13.45 மணிக்கு காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் காலம் எண். 8 ல் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால், காலதாமதம் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் காலம் எண். 14 ல் நகல் வாதிக்கு கொடுக்கப்பட்டதற்கான கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு, சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் புகார்தாரர் புகார் மனுவைக் கொடுக்கவில்லை என்றாலும், புகார் மனு எதிரிக்கு எதிராக பின்னீடு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும்

சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 27.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.27 15:39:48 +0530

Chief Judicial Magistrate,

Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 409/2024**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. மனோகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கிருஷ்ணன்** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு, திண்டுக்கல்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **60** |
| | | | **Dated** | : | **27.03.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜர்.**

அ.சா. 7 (பட்டியல் சாட்சி 15), **திரு. மனோகரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :—</u>**

நான் தற்போது திண்டுக்கல் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2023 ம் வருடம் 14.12.2023 ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது, 14.45 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் குமார் அவர்கள் எனது விசாரணைக்கு வைத்திருந்த திண்டுக்கல் நகல் வடக்கு காவல் நிலைய குற்ற எண். 835/2023, பிரிவுகள் 279, 337 இ.த.ச. வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பார்வையிட்டு, வழக்கின் சம்பவ இடமான திண்டுக்கல், திருவள்ளுவர் சாலை ரோடு, அறுபடை முருகன்

துணை, நைனா இட்டலிக்கடை முன்பு, சம்பவ இடத்தை பார்வையிட்டு மகஜர் சாட்சிகளான கணேசன் மற்றும் நாகராஜன் ஆகியோர் முன்பு மாதிரி வரைபடம் தயார் செய்து, மகஜரில் கையொப்பம் பெற்றேன். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன்பின்பு மகஜர் சாட்சிகளான கணேசன் மற்றும் நாகராஜன் மற்றும் சம்பவ இடத்தில் பார்த்த சாட்சிகள் முகமது இப்ராகிம், மணிகண்டன், வெள்ளையன் ஆகியோரை தனித் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று, காயம்பட்ட நபர் ராஜு, த/பெ. சிக்குபோலன் மேல் சிகிச்சைக்காக மதுரை, அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதைத் தொடர்ந்து, மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ராஜு சுயநினைவு இல்லாமல் மயக்கநிலையில் இருந்ததால், அவருக்கு துணையாக இருந்த வாதி சிவபாலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்பு மதுரை அரசு மருத்துவமனையில் இருந்து திண்டுக்கல் வந்து காவல் நிலையத்தில் ஆஜரில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.12.2023 ம் தேதி 06.50 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்த ராஜு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலைப் பெற்று, 07.00 மணிக்கு சட்டப்பிரிவு 279, 337 இ.த.ச.வில் இருந்து பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் கீழ் சட்ட மாறுதல் செய்து அறிக்கை தயார் செய்து, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேல் விசாரணைக்காக வழக்குக் கோப்பை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

இந்த வழக்கின் மாதிரி வரைபடம் என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் திருவள்ளுவர் சாலை ரோடு மகா ஜோதி ஓட்டல் சந்திப்பில் வேகத்தடை ஒன்று உள்ளது என்றால் சரிதான். மேற்படி வேகத்தடையை பார்வை மகஜரிலோ, மாதிரி வரைபடத்திலோ குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்குஅருகே பவர் ஆப்டிகல்ஸ், பாலாஜி டீ ஸ்டால் ஆகிய கடைகள் உள்ளன என்றால் சரிதான். சம்பவ நேரத்தில் மேற்படி கடைகளில் ஆட்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். அந்த கடைகளில் வேலை பார்ப்பவர்களை தனிநபர் சாட்சிகளாக இந்த வழக்கில் சேர்த்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் காயம்பட்ட நபர் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான எந்தவொரு சான்றும் நீதிமன்றதில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மதுரை, அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான், காயம்பட்ட நபரின் மகன் சிவபாலன் சுய விருப்பத்தின்பேரில் மதுரையில் இருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு காயம்பட்ட நபரை மாற்றிவிட்டார். காயம்பட்ட நபரின் மகன் சிவபாலன் மதுரையில் சிகிச்சை அளித்த மருத்துவர்களின் கருத்துரை இல்லாமல் மதுரையில் இருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு காயம்பட்ட நபரை மாற்றிவிட்டார் என்றால் சரிதான். அவ்வாறு அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு மாற்றிய நேரம் அதிகாலை 03.15 மணி என்றால் சரிதான். மேற்படி அதிகாலை 03.15 மணிக்குத்தான் காயம்பட்ட நபர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையில் காலை 06.50 மணிக்குத்தான் அவரை திண்டுக்கல் அரசு

மருத்துவமனைக்கு கொண்டு வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னவாறு, சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் புகார்தாரர் புகார் மனுவைக் கொடுக்கவில்லை என்றாலும், புகார் மனு மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் எதிரிக்கு எதிராக பின்னீடு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் இறந்தநபரின் கவனக்குறைவினார்தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 27.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.03.27 15:40:21 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**